# பாடம் 63: அழைத்தல்கள் மற்றும் அருள்கொடைகள்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய சில பாடங்களில், நமது திருமுழுக்கு மற்றும் உறுதிபூசுதல் பேற்றினால் நமது கத்தோலிக்க விசுவாசத்திற்கு சாட்சியம் பகரும் கடமை நம் ஒவ்வொருவருக்கும் வழங்கப் பெற்றுள்ளதைப் பற்றி நாம் பார்த்தோம். இந்த பாடத்தில், உங்கள் கிறிஸ்தவ வாழ்வுக்கு அவசியமான மற்றொரு அம்சம், அதாவது, உங்கள் அழைத்தல் மற்றும் அருள்கொடைகள் பற்றி நாம் அறிவோம். உங்கள் கத்தோலிக்க விசுவாத்திற்கு சாட்சியம் பகரும் விதத்தில் உங்கள் வாழ்நாளை எப்படி செலவிடுவது என்பதை உங்கள் அழைத்தல் மற்றும் அருள்கொடைகளே தீர்மானிக்கின்றன.

**தற்போதைய பாடம்:**

1.இந்த உலகில் கடவுளுக்குப் பணியாற்ற அவர் உங்களை எப்படி அழைக்கிறார் என்பதே அழைத்தல் ஆகும். திருமுழுக்கு மற்றும் உறுதிபூசுதல் வழியாக வாழ்வின் குறிப்பிட்ட விதத்தில் கடவுளுக்குப் பணியாற்ற அவர் உங்களை அழைக்கிறார். நீங்கள் ஒரு தனி நபராக, திருமணமான நபராக, திருநிலைப்பாடு பெற்ற குருவாக அல்லது திருத்தொண்டராக, அல்லது உறுதியேற்பு அளித்த துறவியாக கடவுளின் அழைப்பைப் பின்பற்றலாம். எந்த விதமான வாழ்வுக்கு கடவுள் உங்களை அழைக்கிறார் என்பதை முதலில் தீர்மானிப்பது முக்கியம். உங்கள் வாழ்வுக்கான கடவுளின் அழைப்பைத் தீர்மானிக்கும் இந்த செயல்மை தெளிதேர்வு என்று அறியப்படுகிறது. தெளிதேர்வுக்கு ஒருவர் சில எண்ணிக்கை தெரிவுகளைக் கொண்டுள்ளார்.

2. **குருத்துவம்**. குரு என்பவர் விசுவாசம் மற்றும் செபத்தின் ஒரு மனிதராக, மக்களைக் கடவுளிடமும் கடவுளை மக்களிடமும் கொணரும் கடவுளின் அழைப்புக்கு பதிலிறுக்கிறவராக இருக்க வேண்டும். அவர் அருளடையாளங்களில், சிறப்பாக நமது விசுவாசத்தின் ஊற்றும் உச்சமுமாக இருக்கிற நற்கருணையில் வேரூன்றிய மனிதராக இருக்கிறார். அவர் தல ஆயரின் ஒரு நீட்சியாக இருக்கிறார்; சேவை, மணத்துறவு, மற்றும் ஆயருக்கு கீழ்ப்படிகின்ற வாழ்வை வாழ்கின்றார். இறைமக்களுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் கொண்டாடவும் குருக்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

குருத்துவப் படிப்பில் ஆர்வமுள்ள ஆண்கள், தனது குருக்களின் உருவாக்கம் மற்றும் படிப்புக்காக மறைமாவட்டம் பயன்படுத்தும் ஒரு பயிற்றகத்தில் சேருவர். ஒரு குரு மாணவர் இரண்டு ஆண்டுகள் மெய்யியல் மற்றும் நான்கு ஆண்டுகள் இறையியல் என (ஓராண்டு தயாரிப்பைச் சேர்த்து) மொத்தம் ஏழு ஆண்டுகளை பயிற்றகத்தில் செலவிடுகிறார்.

திருநிலைப்பாடு பெற்றதும், அதிக குருக்கள் மறைமாவட்டப் பங்குகளில் பணியாற்றுகின்றனர். அவர்கள் மக்கள் நடுவே கிறிஸ்துவின் செயல்பாடு மற்றும் அன்பின் நிகழ்மையாக இருந்து, மக்களின் விசுவாசத்தைப் பகிர்ந்து, அவர்கள் பணியாற்றுகின்ற மக்களின் போராட்டங்களில்

பங்கேற்கிறவர்களாக இருக்க வேண்டும். சில குருக்கள் பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்றும் ஆன்மிக வழிகாட்டிகளாகவும், மற்றவர்கள் பல்வேறு மறைமாவட்ட நிறுவனங்களிலும் பணியாற்றுகின்றனர். குருக்கள் எங்கு பணியாற்றினாலும், தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு அவர்கள் அமைதி, அன்பு, மற்றும் நீதியைக் கொணர உழைக்கின்றனர்.

3. **நிரந்தர திருத்தொண்டர்**. நிரந்தர திருத்தொண்டர் என்கிறவர், 35 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய திருமணமான அல்லது ஆகாத ஓர் ஆணாக இருக்கிறார், வார்த்தை, பீடம், மற்றும் பிறரன்பு திருப்பணிகளில் தொண்டாற்ற திருநிலைகளின் அருளடையாளத்தால் திருநிலைப்பாடு பெறுகிறார். அவர் திருச்சபையின் ஓர் அலுவல்பூர்வ பிரதிநிதியாகப் பணியாற்றுகிறார், திருநிலைகள் அருளடையாள அருளின் உதவியால் "பணிவிடை பெற அன்று, பணிவிடை புரிய வந்த" கிறிஸ்துவுக்கு உலகமெங்கும் சாட்சியாக இருக்கிறார். நிரந்தர திருத்தொண்டர் கிறிஸ்துவின் திருச்சபையின் ஆண்கள் மற்றும் பெண்களின் பல தேவைகளை உணர்ந்து, அந்த தேவைகளைச் சந்திக்கிறதில் உள்ள சவால்களைத் திறம்பட எதிர்கொள்கிறார். திருத்தொண்டர்கள், பெரும்பாலான வேளையில், அன்றாட வேலைகளால் தங்கள் குடும்பங்களைத் தாங்கும் திருமணமான ஆண்களாக இருக்கின்றனர். அவர்கள் ஒரு வாரத்தின் பல மணி நேரங்கள் தங்கள் திருப்பணியில் பங்களிக்கின்றனர், மேலும் வழக்கமாக எந்த பணம்சார் நிகரீடும் பெறுவதில்லை.

இந்த திருத்தொண்டர்கள் திருப்பலியில் போதிக்கின்றனர், திருமுழுக்கு அளிக்கின்றனர், திருமணங்களில் சாட்சியாக இருக்கின்றனர், கற்பிக்கின்றனர், பிணியாளர்கள், முதியோர், இளையோர், சிறைப்பட்டோர், சிறுபான்மை குழுக்கள், மற்றும் பல களங்களில் திருப்பணியில் பங்கேற்கின்றனர். ஏழைகளின் நீதி மற்றும் ஆதரிப்பே திருத்தொண்டர் திருப்பணியின் முதன்மை நோக்கமாக இருக்கிறது.

நிரந்தர திருத்தொண்டர் ஆழ்ந்த விசுவாசமுள்ள ஒரு மனிதராக இருக்க வேண்டும். அவர் குறிப்பிட்ட அளவு நேரத்தை தயாரிப்புக்கான படிப்புக்கு அர்ப்பணிக்க விருப்பமுள்ளவராக, மற்றும் துன்புறுகிற, தனிமையிலுள்ள, மற்றும் அதிகாரமற்ற மக்களுக்குப் பணியாற்றத் தம் வாழ்வின் பல மணி நேரங்களைச் செலவிட விருப்பமுள்ளவராக இருக்க வேண்டும். அவர் திருமணமானவராக இருந்தால், அவரது மனைவியும் குடும்பமும் அவரது திருப்பணியை ஆதரிக்க விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

4. **துறவற வாழ்வு.** அருள்சகோதரராக அல்லது அருள்சகோதரியாக, துறவியாக ஆவதற்காக துறவற வாழ்வில் நுழைகிற ஒருவர், கிறிஸ்துவின் வாழ்வை வாழ்வதற்கான ஓர் அழைப்புக்கு பதிலிறுக்கிறார். அவர்கள் இந்த வாழ்வை வெளிப்படுத்தும் விதம் பாலினம், குழுமம், அருள்கொடை, மற்றும் திருத்தூதரியப் பணிக்கு ஏற்ப வேறுபட்டிருந்தாலும், அதன் சாரமாக கிறிஸ்துவின் திருச்சபையின் சேவைக்காக அவருக்குத் தங்கள் வாழ்வை அளிக்க அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். எந்த வேலையும் இந்த அழைத்தலைத் தெளிதேர்வு செய்யும் ஆண் அல்லது பெண்ணின் வாழ்வு அல்லது பணியை வரையறுக்கிறதில்லை. மிகப் பொருத்தமாக,

கிறிஸ்துவின் அன்பு வழியாக அவர்கள் பெறுகிற இன்பம் மற்றும் தூயநிலையின் சாட்சியமே அதை வரையறுக்கும் பண்பாக இருக்கிறது.

தமது மணத்துறவு, ஏழ்மை, மற்றும் கீழ்ப்படிதல் வாழ்வில், நமது அதிகாரம், அன்பு, மற்றும் பொருட்களின் பயன்பாட்டில் பொறுப்புடன் இருக்க, ஒரு துறவற சகோதரர் நமக்கு சவால் விடுக்கிறார். தமது வாழ்வை கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கிறதில், மற்றும் ஏழ்மை, கற்பு, மற்றும் கீழ்ப்படிதலின் உறுதியேற்பு செய்வதில், ஒரு துறவற சகோதரி தமது வாழ்வை முற்றிலுமாக ஆண்டவருக்கு அளிக்கிறார், அதனால் ஆண்டவர் அவரை மிக நிறைவான அன்பு மற்றும் அர்ப்பணிப்பின் உறவுநிலைக்குள் ஆழமாக இழுக்கிறார்.

பெரும்பாலான நேரங்களில், அருள்சகோதரர்களும் அருள்சகோதரிகளும் ஒரு குழுமத்தில் வாழ்கின்றனர். தங்கள் தியாக மற்றும் சேவை வாழ்வுக்கான வலிமை மற்றும் ஆதரவை அவர்கள் ஒருசேர பெறுகின்றனர். கிறிஸ்துவைப் போன்று வாழும் ஆழ்ந்த விருப்பத்தால் அவர்கள் ஒருசேர பிணைந்துள்ளனர், இவ்வாறு ஆண்டவர் இருக்கிறார் என்பதை உலகிற்கு சாட்சியம் பகர்கின்றனர். ஒவ்வொரு குழுமமும் ஒரு குறிப்பிட்ட ஆன்மிகத் தலைவர், அருள்கொடை, மற்றும் திருச்சபைக்கான சேவையைச் சார்ந்து தங்களுக்கான மாதிரியை அமைத்தாலும், எல்லா குழுமங்களும் நவீன உலகில் கிறிஸ்து என்ற நபரை எதிர்கொள்ள நாடுகின்றன.

5. **திருமண வாழ்வு**. பல மக்கள் தெளிதேர்வு செய்யும் அழைத்தலாக திருமண ஒன்றிப்பின் அருளடையாளம் இருக்கிறது. இந்த அருளடையாளத்தில், ஒரு ஆணும் பெண்ணும் ஒருவர் மற்றவருக்கும் கடவுளுக்கும் தங்கள் இறப்பு வரை தங்களை அர்ப்பணிக்கின்றனர். அவர்கள் இருவரின் வாழ்வு ஒன்றாக மாறுகிறது, மேலும் அதன் சாரத்தில் தூய திரித்துவம் மற்றும் திருச்சபையின் உருவம் பிரதிபலிக்கிறது. திருமணக் கொண்டாட வேளையில், அவர்கள் ஒருவர் மற்றவருக்கான தங்கள் அன்புக்கு திருச்சபையின் ஆசியை நாடுகின்றனர், மேலும் நெருக்கம், அன்பு மற்றும் நம்பகத்தன்மையில் ஒருசேர வாழ்வதற்கான தங்கள் வாக்குறுதியை பொதுவில் முத்திரையிடுகின்றனர்.

திருமணமான இணையரது அன்பின் செயல்வடிவமாக ஒரு குழந்தை இருக்கிறது; அவர்களது உடல் மற்றும் ஆன்மிகம் சார்ந்த ஒன்றிப்பின் கனி. ஒரு குழந்தை என்பது திருமணத்திற்கு கடவுளின் கொடை மற்றும் ஆசியாக இருக்கிறது. அது அன்பான சூழ்நிலையில் பேணப்பட்டு வரவேற்கப்பட வேண்டும். சில நேரங்களில், அவர்கள் குழந்தைகளை விரும்பினாலும், இணையர் குழந்தைகள் பெற இயலாதவர்களாய் இருக்கின்றனர். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கவில்லை அல்லது தங்கள் அழைத்தலை தெளிதேர்வு செய்வதில் அவர்கள் சரியாகச் செவிமடுக்கவில்லை என்பது இதன் பொருளன்று. இந்த அழைத்தலில் வேறு விதங்களில் சாட்சியாய் இருக்க கடவுள் அவர்களை அழைத்திருக்க வேண்டும்.

குடும்ப மேலாண்மை; வழிகாட்டுதல், கல்வி கற்பித்தல், மற்றும் தங்கள் குழந்தைகளுக்கு தேவையானவற்றை வழங்குதல்; மற்றும் தங்கள் சொந்த ஆன்மிகம், அறிவு, மற்றும் சமூகம்

சார்ந்த தேவைகளைச் சந்தித்தல் ஆகியவை ஒவ்வொரு இணையரிலும் மிகச் சிறந்தவற்றைக் வெளிக்கொணர்கின்றன. தங்களுக்கான கடவுளின் அன்பில் ஆழ்ந்த விசுவாசம் கொள்வதே திருமணமான இணையரின் வாழ்வுக்கு அடித்தளமாக இருக்கிறது. செபம், அர்ப்பணம், மற்றும் தங்கள் குடும்பம், திருச்சபை, மற்றும் குழுமத்துக்கான சேவை வழியாக அவர்களின் விசுவாசம் வெளிப்படுத்தப்படுகிறது. விசுவாசம் அவர்களுக்கு, தவிர்க்கவியலாத போராட்டங்கள் நேரிடுகின்ற பொழுது பேரளவான ஞானம், பொறுமை, மற்றும் எதிர்நோக்கையும், கடவுள் தங்களுக்கு வழங்கிய ஆசிகளை அவர்கள் கொண்டாடும் பொழுது செறிவான இன்பத்தையும் வழங்குகிறது.

6. **தனித்த மணத்துறவு வாழ்வு**. தனித்த நபருக்கான அழகிய மற்றும் சுமையுள்ள அழைத்தல் இன்றைய உலகில் பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை. தனித்த அழைத்தலும், மற்றெல்லா அழைத்தல்களையும் போன்று ஆன்மிகப் பரிமாணத்தைக் கொண்டிருக்கலாம். சில நேரங்களில் இது ஏற்க கடினமான அழைத்தலாகக் கூறப்பட்டாலும், இது திண்ணமாக தனிமை அல்லது தனிநிலை வாழ்வாக இருக்கிறதன்று.

நம்மில் பலரும், ஒரு குறிப்பிட்ட படிநிலைக்கு, மற்ற அழைத்தல்களுக்குள் நுழைவதற்கு முன்னதாக சிறிதளவு பெயர்வுநிலை காலத்திற்கு இந்த அழைத்தலுக்குள் செல்கிறோம். இது மற்றவர்களுக்கு பணியாற்றத் தங்களை முழுமையாக வழங்குவதற்கான ஒரு வாய்ப்பையும் ஒரு சுதந்திரத்தையும் வழங்குகிறது. தனித்தநிலை ஒரு அழைத்தலாகத் தன்னிலேயே முடிந்து விடுவதில்லை, தன்னளித்தல் மற்றும் தாராளத்திலும் செயல்பாட்டிலும் வாழ்வளித்தலுக்கு இட்டுச் செல்கிறது.

தனித்த நபர் மற்ற அழைத்தல்களைப் போன்று நபர்களின் ஒரு குழுமத்திற்கான எந்த அர்ப்பணத்திலும் பிணைக்கப்படவில்லை. இவ்வாறு, அவர்களுக்கு உள்ளமைந்த ஆதரவு முறைமை இல்லை. இந்த அழைப்பை வாழ்தல் இவ்வாறு கடவுளுடன் ஒரு வலுவான உறவுநிலையை வளர்க்க ஒரு வாய்ப்பை வழங்குகிறது. தனித்தவராக இருக்கின்ற தனிநிலை கடவுள் இல்லாத வாழ்வின் முழுமையின்மையைக் கண்டறியத் தனிநபரை அனுமதிக்கும் ஓர் ஆசியாக இருக்க முடியும்.

(மேலுள்ளவை http://www.sfcatholic.org/vocations/what-is-a-vocation/ மற்றும் https://rcsj.org/vocations/what-is-a-vocation-ல் இருந்து எடுக்கப்பட்டுள்ளன)

7. திருநிலைகளுக்குள் திருநிலைப்பாடு பெறாமலும், துறவற வாழ்வுக்குள் உறுதியேற்பு செய்யாமலும் இருக்கின்ற ஒரு நபர் பொதுநிலையினர் என்று அழைக்கப்படுகின்றார். ஒரு பொதுநிலையினர் திருமணமானவராக அல்லது தனித்தவராக இருக்கலாம்.

8. பொதுநிலையினராக இருக்கிறது என்பதற்கு “எந்த அழைத்தலும்” கொண்டிருக்கவில்லை என்று பொருளன்று. உண்மையில், திருச்சபை பொதுநிலை வாழ்வை ஒரு சிறப்பு

அழைத்தலாகக் கருதுகிறது. பொதுநிலையினர், திருநிலைகளுக்குள் திருநிலைப்பாடு பெறவில்லை என்றாலும், திருமுழுக்கின் பேற்றின் வழியாக கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்கினரிய, மற்றும் அரச எய்துபணியில் அவர்களும் பங்கு கொண்டுள்ளதால் திருச்சபையின் மிக முக்கியப் பகுதியாக இருக்கின்றனர் (கதிம 897).

*கதிம 1268*: ‘‘திருமுழுக்கு பெற்றோர் ‘தூய குருத்துவமாக இருக்கவும், ஆன்மிக வீடாகக் கட்டப்படவும்’ ‘உயிருள்ள கற்கள்’ ஆகியுள்ளனர். திருமுழுக்கால் அவர்கள் கிறிஸ்துவின் குருத்துவத்தில், அவரது இறைவாக்கினரிய மற்றும் அரச எய்துபணியில் பங்கு பெறுகின்றனர். அவர்கள் ‘தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக, அரச குருத்துவத்தினராக, தூய மக்களினமாக, கடவுளின் சொந்த மக்களாக’ இருக்கின்றனர், ‘இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்தவரின் மேன்மைநிறை செயல்களை அவர்கள் அறிவிக்கின்றனர்.’ *திருமுழுக்கு எல்லா நம்பிக்கையாளர்களுக்கும் பொது குருத்துவத்தில் பங்கு அளிக்கிறது*.’’

ஒருபுறம், திருச்சபை *திருப்பணி குருத்துவத்தைக்* கொண்டுள்ளது, அதாவது, திருநிலைகள் அருளடையாளத்தால் திருநிலைப்பாடு பெற்ற ஆண்கள். மறுபுறம், பொதுநிலையினர் எல்லாரும் *பொது குருத்துவத்தின்* உறுப்பினர்களாக இருக்கின்றனர், மேலும் தங்கள் திருமுழுக்கின் காரணத்தால் அவர்கள் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கு பெறுகின்றனர்.

9. திருநிலைகளுக்குள் அழைக்கப்பட்ட ஆண்கள் திருச்சபையை ஆளும் பணியில் இருக்கின்றனர், பொதுநிலையினரின் ஆளுகை *உலகுசார்* வாழ்வாக இருக்கிறது.

*கதிம 898*: ‘‘பொதுநிலையினரின் சிறப்பு அழைத்தல் காரணமாக, உலகுசார் விடயங்களில் ஈடுபடுவதில் கடவுளின் அரசைத் தேடுவதும், கடவுளின் விருப்பத்திற்கு ஏற்ப அவற்றை நடத்துவதும்... அவர்களைச் சார்ந்துள்ளது. ஒரு சிறப்பான விதத்தில் தாங்கள் நெருங்கியத் தொடர்பு கொண்டுள்ள எல்லா உலகுசார் விடயங்களை ஒளியூட்டுவதும் ஒழுங்குபடுத்துவதும் அவர்களுக்குரியது, அதாவது படைத்தவரும் மீட்பருமானவரின் மாட்சிக்காக எப்பொழுதும் இவை கிறிஸ்துவுக்கு ஏற்ப பயனளித்து வளர்வதாக.’’

பொதுநிலையினர் எப்பொழுதும் கத்தோலிக்க மனநிலையோடு ‘‘சமூக, அரசியல், மற்றும் பொருளாதார மெய்மைகளில்’’ தீவிரமாக ஈடுபட வேண்டுமென்று திருச்சபை எதிர்பார்க்கிறது (கதிம 899). அவர்களின் விசுவாசம் மற்றும் திருச்சபையின் பகுதியாக அவர்கள் இருத்தல் ஆகியவை உலகிலும், சமூகத்தில் ஒவ்வொரு துறையிலும் திருச்சபையை நிகழ்மைப்படுத்த அவர்களை இயக்க வேண்டும், அதனால் அவர்கள் கிறிஸ்தவ விழுமியங்கள் சமூகம் முழுவதும் கலந்து ஊடுருவும்.

10. உலகில் திருச்சபையின் எய்துபணியில் பொதுநிலையினரின் செயல்நிலை ஈடுபாடு இல்லாமல், ஆயர்கள் மற்றும் குருக்களின் உழைப்பு ‘‘முழுவதும் பயனளிக்க முடியாது’’,

ஏனெனில் உலகில் உள்ள பொதுநிலையினரின் இருப்பு வழியாகவே மக்கள் இயேசு கிறிஸ்துவை அறியும் வாய்ப்பு பெற முடியும் (கதிம 900).

*புனித ஜான் ஹென்றி நியூமன்*: "... பொதுநிலையினர் இல்லாத திருச்சபை கேலிக்குரியதாகத் தெரியும்."

11. *பொதுநிலையினர் கிறிஸ்துவின் குருத்துவ அலுவலில் பங்கு பெறுகின்றனர்* (கதிம 901-3). குருக்களிடம் இருந்து வேறுபட்ட விதத்தில் என்றாலும், பொதுநிலையினர், தங்களுக்குரிய விதத்தில், "ஆவிக்குரிய பலிகளை" கடவுளுக்கு அளிக்க "தூய ஆவியாரால் திருப்பொழிவு" பெற்றுள்ளனர். இதை அவர்கள் தாங்கள் செய்கின்றப் பணிகள், தங்களது செபங்கள், மற்றும் தூய ஆவியாரால் வழிநடத்தப்பட்டு அவர்கள் வாழ்கின்ற அன்றாட வாழ்வின் வழியாகச் செய்கின்றனர். அவர்கள் வாழ்வில் நேரிடுகின்ற துன்பங்களால், "பொறுமையில் பிறத்தல்" கடவுளுக்குச் செலுத்தும் பலிகளாக இருக்கின்றன. திருமணமான இணையர் தங்கள் துணைவர்களுக்கு நம்பகமாக இருக்கிறதிலும், தங்கள் குழந்தைகள் கிறிஸ்தவ விசுவாசத்தில் பொறுப்புடன் வளர்க்கிறதிலும் கிறிஸ்துவின் குருத்துவ அலுவலில் பங்கு பெறுகின்றனர். இந்த எல்லா அன்றாட அனுபவங்களும் நற்கருணை கொண்டாட்டத்திற்கு கொணரப்பட்டு, "ஆண்டவரின் உடலோடு தந்தைக்கு செலுத்தப்படுகின்றன". பொதுநிலையினர் "தங்கள் வாழ்வின் தூயநிலையால்" வழிபாடு செலுத்த அழைக்கப்படுகின்றனர்.

12. *பொதுநிலையினர் கிறிஸ்துவின் இறைவாக்கினரிய அலுவலில் பங்கு பெறுகின்றனர்* (கதிம 904-7). பொதுநிலையினர் வாழ்வின் சாதாரண சூழல்களிலும் உண்மை மற்றும் நேர்மையின் பக்கம் நிற்கின்ற பொழுது இறைவாக்கினராக வாழ்கின்றனர். அவர்கள் தங்களது சொந்த குடும்பம், தங்கள் அடுத்துள்ளவர்கள், மற்றும் உலகுசார் வாழ்வின் உடனுழைப்பாளர்களுக்கு நற்செய்தி வாழ்வுக்கு இறைவாக்கினரிய சாட்சியாகத் திகழ்கின்றனர். அவர்கள் இவ்வாறு செய்வதால், கிறிஸ்து மற்றும் "வார்த்தையின் அருளால்" அவர்கள் "விசுவாச உணர்வை" (*சென்சுஸ் பீதெய்*) வழங்குகின்றனர். அவர்களின் எய்துபணி "உலகின் சாதாரண சூழல்களில் நிறைவு செய்கின்றனர்". எனினும், தங்கள் வாழ்வின் செயல்களால் நற்செய்திக்குச் சான்று பகர்வதற்கும் மேலாக, "நம்பிக்கையற்றோர்... அல்லது விசுவாசிகளிடம்" கிறிஸ்துவைப் பற்றி நேரடியாகப் பேசவும் பொதுநிலையினர் வாய்ப்பு பெற்றுள்ளனர்."

13. *பொதுநிலையினர் கிறிஸ்துவின் அரச அலுவலில் பங்கு பெறுகின்றனர்* (கதிம 908-11). உலகுசார் ஆளுகையின் தலைமைத்துவப் பொறுப்பால் பொதுநிலையினர் கிறிஸ்துவின் அரச அலுவலில் பங்கு பெறுகின்றனர். கிறிஸ்து செய்யும் விதத்தில் அவர்கள் தாங்கள் செல்வாக்கு கொண்டப் பகுதிகளை ஆண்டுநடத்த அழைக்கப்படுகின்றனர். அவர்கள் தலைமையேற்கின்ற மதச்சார்பற்ற உலகின் பகுதிகளில், பழக்கங்கள் பாவம் நிறைந்ததாகின்ற இடங்களில், அறநெறி விழுமியங்களை மீட்டெடுக்கிற அம்சங்களில் அவர்கள் திருத்தம் கொணர வேண்டும். திருச்சபையின் ஆளுகையிலும், தங்கள் மேய்ப்பர்களோடு ஒத்துழைக்கின்றத் தலைமைத்துவப்

பதவிகளில் பொதுநிலையினர் நியமிக்கப்பட முடியும். அத்தகைய நியமனங்கள் ஒவ்வொரு பொதுநிலையினருக்கும் ஆண்டவர் வழங்கியுள்ள அருள்கொடைகளின் அடிப்படையிலானதாக இருக்க வேண்டும்.

14. ஆண்டவருக்கும் அவரது திருச்சபைக்கும் நாம் பயனுள்ள விதத்தில் பணியாற்ற, நாம் நமது தனிப்பட்ட அருள்கொடைகளைக் கண்டுணர்வது தேவையாகிறது. சிறப்பு கொடைகளான அருள்கொடைகள், உலகில் கடவுளின் அன்பு மற்றும் மீட்பின் நிகழ்மையின் ஆற்றல்மிகு வாய்க்கால்களாக அவர்கள் இருக்கச் செய்ய, தூய ஆவியாரால் கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு திறன்களாக, சிறப்பு ஆற்றலூட்டலாக இருக்கின்றன. அசாதாரணமானவை அல்லது சாதாரணமானவை எப்படி இருந்தாலும், அருள்கொடைகள் பிறரன்பில் அல்லது சேவையில் திருச்சபையைக் கட்டியெழுப்பப் பயன்படுத்தப்பட வேண்டும் (கதிம 2003).

ஓர் அருள்கொடையானது எப்பொழுதும் நமது விசுவாசத்தோடு ஆழமாக இணைந்துள்ளது, மேலும் கடவுளுடனான நமது உறவுநிலையின் ஒரு வெளிப்பாடாக இருக்கிறது. இவ்விதமாக இது இயற்கையான அல்லது கற்றுக்கொண்ட திறனில் இருந்து வேறுபடுகிறது. சரியாகக் கையாளப்படும் ஓர் அருள்கொடை, மற்ற மக்களை கடவுளிடம் இழுக்கிறது. ஒரு தருணத்தில், நாம் கலை படிப்புகளை எடுத்து, ஓவியம் வரையக் கற்கலாம். சிஸ்டைன் சிற்றாலயத்தின் மேற்கூரை, மக்களை கடவுளிடம் ஈர்க்கிறது. ஓர் ஆலயத்தில் உள்ள ஓவியக் கண்ணாடி சன்னல்களும் அதையே செய்கின்றன. ஓர் அருள்கொடை என்பது இயேசு கிறிஸ்துவுக்கும் அவரது திருச்சபைக்கும் அடிபணிகின்ற கிறிஸ்தவர்களின் ஒட்டுமொத்தச் சீடத்துவ சூழலில் செயலாக்கம் பெற வேண்டும்.

15. உங்கள் அருள்கொடைகள் எவையென்று உங்களுக்குக் காட்டும் அறிகுறிகளாக இருக்க சாத்தியமானவற்றைப் பெறுவதற்கான சில அனுபவங்கள் இருக்கின்றன.

அ) அந்த கொடையைப் பயன்படுத்தும் பொழுது அமைதி, ஆற்றல், மற்றும் மகிழ்ச்சியின் ஒரு தவறில்லாத உள்ளார்ந்த அனுபவம். அதைப் பயன்படுத்தும் பொழுது நீங்கள் ஆற்றல் பெற்றதாக உணர்கிறீர்கள்.

ஆ) நீங்கள் நிறைவுசெய்ய முயற்சிக்கிறதில் வழமைக்கு மாறாகப் பயனுள்ள மற்றும் வெற்றிகரமான விளைவுகள்.

இ) மற்ற மக்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக உங்களுக்குள் இருக்கின்ற கொடையை கண்டுணர்தல்.

உங்கள் அருள்கொடையைச் செயலாக்கும் பொழுது முழு அனுபவமும் ஓர் இயல்பான ஓட்டத்திலும் எளிதாகவும் இருத்தல், நாம் ‘‘தகுதியுள்ளவர்’’, அதாவது நமது இடத்தை நாம் கண்டுபிடித்து விட்டோம், நாம் உண்மையில் நாமாக இருக்கலாம், மேலும் அதே நேரத்தில், நமது இயல்பான திறன்களைத் தாண்டிய நன்மைத்தனத்தின் ஒரு முகவர் என்ற உணர்வு ஏற்படுகிறது.

16. அருள்கொடைகள் என்றால் என்ன, திருச்சபையின் மீட்கின்ற எய்துபணியில் அவற்றின் நோக்கங்களுக்கு உள்ளத் தொடர்பு என்ன என்பதை கத்தோலிக்கத் திருச்சபை விரிவாக விளக்குகிறது.

அ) அருள்கொடைகள் என்பவை திருச்சபை தனது எய்துபணியை நிறைவேற்ற தூய ஆவியாரால் வழங்கப்படுகின்றன.

*கதிம 767*: ''மண்ணகத்தில் செய்யுமாறு மகனுக்குத் தந்தை வழங்கிய பணி நிறைவுற்ற பொழுது, திருச்சபையைத் தொடர்ந்து புனிதப்படுத்த பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியார் அனுப்பப்பட்டார். பிறகு திருச்சபை வெளிப்படையாக மக்கள் கூட்டத்துக்கு காட்டப்பட்டு, போதனை வழியாக, மக்களினங்கள் நடுவே நற்செய்தி பரவத் தொடங்கியது. மீட்புக்காக எல்லா மனிதரையும் 'ஒன்றுதிரட்ட', தன் இயல்பிலேயே எய்துபணியாளராக இருக்கின்றத் திருச்சபை, எல்லா மக்களினங்களையும் சீடர்களாக்க கிறிஸ்துவால் அனுப்பப்பட்டது.''

*கதிம 768*: ''அதனால் அது தனது எய்துபணியை நிறைவேற்ற முடியும், தூய ஆவியார் திருச்சபைக்கு பலிதமான படிமை மற்றும் அருள்சார் கொடைகளை வழங்கியுள்ளார், இவ்விதம் அதை வழிநடத்துகிறார்'. ஆகவே திருச்சபை, தனது நிறுவனர் வழங்கிய கொடைகளோடும், பிறரன்பு, தாழ்ச்சி மற்றும் தன்மறுப்பு என்ற அவரது பேறுகளைக் கடைபிடித்தும், அறிவித்தலுக்கான எய்துபணியைப் பெற்று, கிறிஸ்து மற்றும் கடவுளின் அரசை எல்லா மக்கள் நடுவிலும் நிறுவுகிறது, மேலும் அது மண்ணகத்தில் இறையரசின் விதையாகவும் தொடக்கமாகவும் இருக்கிறது.''

ஆ) திருச்சபையின் விசுவாசிகள், தூய ஆவியாரால் வழங்கப்பட்ட தங்கள் அருள்கொடைகள் வழியாக, திருச்சபையைக் கட்டியெழுப்ப, மனிதர்களின் பொது நலனுக்காகச் செயல்பட, மற்றும் உலகின் தேவைகளை நிறைவேற்ற உதவத் திறனுள்ளவர்கள் ஆகின்றர்.

*கதிம 798*: ''தூய ஆவியார் 'உடலின் ஒவ்வொரு உறுப்பின் மீட்புச் செயலிலும் உயிருள்ள மற்றும் உண்மையான மூலமாக' இருக்கிறார். உடல் பிறரன்பில் கட்டியெழுப்பப்பட பல விதங்களில் அவர் செயலாற்றுகிறார்: ...('அருள்கொடைகள்' எனப்படும்) பல சிறப்பு அருள்களால், அதனால் அவர் விசுவாசிகளை 'திருச்சபையின் புதுப்பித்தல் மற்றும் கட்டியெழுப்பலுக்கான பல்வேறு பணிகள் மற்றும் அலுவல்களை மேற்கொள்ள தகுதியும் தயாரும் செய்கின்றார்'.''

*கதிம 799*: ''அசாதாரணமானதாக அல்லது எளியதும் தாழ்ச்சியானதுமாக இருந்தாலும், அருள்கொடைகள் என்பவை திருச்சபைக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகப் பயனளிக்கும்

தூய ஆவியாரின் அருள்களாக இருக்கின்றன, அதன் கட்டியெழுப்பல், மனிதர்களின் நலன், மற்றும் உலகின் தேவைகளுக்காக அவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.''

*கதிம 951*: ''அருள்கொடைகளின் ஒன்றிப்பு. திருச்சபையின் ஒன்றிப்புக்குள், தூய ஆவியார் திருச்சபையைக் கட்டியெழுப்ப 'ஒவ்வொரு தரநிலையிலும் உள்ள கிறிஸ்தவர்கள் நடுவே சிறப்பு அருள்களை பகிர்ந்தளிக்கிறார்'. தற்போது, 'ஒவ்வொருவருக்கும் பொது நலனுக்கான ஆவியாரின் வெளிப்பாடு வழங்கப்பட்டுள்ளது'.''

இ) அருள்கொடைகள் நன்றியறிதலோடு ஏற்கப்பட்டு, மேலும் குருக்கள் மற்றும் ஆயர்களின் மேய்ப்புசார் அதிகாரத்துக்கு கீழ்ப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

*கதிம 800*: ''அருள்கொடைகள் அவற்றைப் பெறுகின்ற நபராலும் திருச்சபையின் எல்லா உறுப்பினர்களாலும் நன்றியறிதலோடு ஏற்கப்பட வேண்டும். அவை திருத்தூதரிய வாழ்வுக்கும் கிறிஸ்துவின் உடல் முழுவதன் தூயநிலைக்கும் அற்புதமான அருள் வளமாக இருக்கின்றன, அவை மெய்யாகத் தூய ஆவியாரின் நேரிய கொடைகளாக இருக்கின்றன, மேலும் அதே ஆவியாரின் அதிகாரப்பூர்வ தூண்டுதல்களோடும் முழு இணக்கத்தில் பயன்படுத்தப்படுகின்றன, அதாவது, பிறரன்போடு இருத்தலே, எல்லா அருள்கொடைகளின் உண்மை அளவீடாகும்.''

*கதிம 801*: ''இந்த விதத்தில் அருள்கொடைகளின் தெளிதேர்வு எப்பொழுதும் அவசியமாக இருக்கிறது. திருச்சபையின் மேய்ப்பர்களுக்குச் சுட்டப்படுதல் மற்றும் கீழ்ப்படுதலில் இருந்து விலக்கான எந்த அருள்கொடையும் இல்லை. 'அவர்களின் அலுவல் உண்மையில் ஆவியாரை தடுப்பது அன்று, ஆனால் எல்லா விடயங்களையும் ஆய்ந்து, நன்மையை நிலைநாட்டுதலே,' அதனால் எல்லா பரந்துபட்ட மற்றும் நிறைவுசெய்யும் அருள்கொடைகள் 'பொது நலனுக்காக' ஒருசேர பணியாற்றுகின்றன.''

ஈ) வேறுபட்ட வகைளில் அருள்கொடைகள் இருக்கின்றன, தூய ஆவியார் வேறுபட்ட அருள்கொடைகளை வேறுபட்ட பண்புகளோடு திருச்சபையின் வேறுபட்ட நபர்களுக்கு வழங்குகிறார், அவை எல்லாம் செயல்நிலையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

*கதிம 2003*: ''அருள் என்பது நம்மை ஏற்புடையோராக்கிப் புனிதப்படுத்துகிற ஆவியாரின் முதலாவதும் மிகமுன்னதுமான கொடையாக இருக்கிறது. ஆனால் அருளானது ஆவியார் தமது பணியோடு நம்மை இணைக்க, மற்றவர்களின் மீட்பிலும் கிறிஸ்துவின் உடலாகியத் திருச்சபையின் வளர்ச்சியிலும் உடனுழைக்க நமக்கு வழங்குகிற கொடைகளையும் கொண்டுள்ளது. வேறுபட்ட அருளடையாளங்களுக்கு உரித்தான அருளடையாள அருள்களும் கொடைகளும் இருக்கின்றன. மேலதிகமாக 'அருள்சார் கொடை' என்ற பொருளில் திருத்தூதர் பவுல் பயன்படுத்தும் கிரேக்கப் பதத்தில் இருந்து வரும், அருள்கொடைகள் எனப்படும் சிறப்பு

அருள்களும் இருக்கின்றன. அவற்றின் பண்பு என்னவாக இருந்தாலும் -- சில நேரங்களில் புதுமை செய்தல் அல்லது பரவசப்பேச்சு பேசுதல் போன்று அசாதாரணமாக இருக்கிறது – அருள்கொடைகள் புனிதப்படுத்தும் அருளைச் சார்ந்துள்ளன, மேலும் திருச்சபையின் பொது நலனை நோக்கமாகக் கொண்டுள்ளன. அவை திருச்சபையைக் கட்டியெழுப்பும் பிறரன்பின் சேவையில் இருக்கின்றன.''

*கதிம 2004*: ''சிறப்பு அருள்களின் நடுவே கிறிஸ்தவ வாழ்வு மற்றும் திருச்சபைக்குள் உள்ள திருப்பணிகளின் பொறுப்புகளைச் செயலாக்கத் துணையிருக்கும் நிலைசார் அருள்கள் பற்றி குறிப்பிட்டாக வேண்டும். நமக்கு வழங்கப்பட்டுள்ள அருளுக்கு ஏற்ப வேறுபடும் கொடைகளை கொண்டிருந்தால், நாம் அவற்றைப் பயன்படுத்துவோம்: இறைவாக்குரைத்தலாக இருந்தால், நமது விசுவாசத்தின் தகவளவில்; சேவையாக இருந்தால், நமது பணியில்; கற்பிக்கிறவர், தமது கற்பித்தலில்; ஊக்கமூட்டுகிறவர், தமது ஊக்குவித்தலில், பங்களிக்கிறவர், தமது தாராளநிலையில்; உதவி வழங்குகிறவர், பேரார்வத்தோடு; இரக்கச் செயல்கள் செய்கிறவர், மகிழ்ச்சியோடு.''

17. வேறுபட்ட வகைகளிலான கொடைகள் புனித மறைநூலில் காணப்படுகின்றன:

ஆ) **மரபுசார் கொடைகள்** (எசாயா 11:1-3): உங்களை ஒரு நல்ல கிறிஸ்தவராக அறநெறி வாழ்வு வாழச் செய்வதற்காக, நீங்கள் திருமுழுக்கு மற்றும் உறுதிபூசுதல் பெற்ற வேளையில் இந்த கொடைகள் எல்லாம் உங்களுக்கு வழங்கப்பட்டன. இந்த கொடைகளைச் செயல்படத் தூண்டுவது உங்களுக்குரியது.

*ஞானம்* – நமது உள்ளார்ந்த இருப்பில், கடவுளின் கண்ணோட்டத்தில் அல்லது பார்வையில் நாம் உலகைக் காண்பதற்கு திறன் அளிக்கின்ற ஒரு புரிதல். ஆண்டவருடனான ஆழ்ந்த, தனிப்பட்ட ஒன்றிப்பு மற்றும் அவரது நிலையான அன்பின் அடிப்படையில், நமது வாழ்வில் உள்ள அனைத்தையும் பற்றி முடிவெடுக்கும் திறனை வளர்க்க இது நமக்கு உதவுகிறது.

*மெய்யுணர்வு* – இறை உண்மையால் நமது மனங்கள் மற்றும் இதயங்களுக்கு அறிவூட்டல், அதனால் ஆண்டவரின் மறைபொருள்களை நாம் பற்றிக்கொள்ள முடியும். இந்த கொடை நாம் ஆண்டவரை அதிக ஆழமாகக் காண்பதற்கு திறன் அளிக்கின்றது. இது தூய மறைநூல்களை நாம் வாசிக்கும் பொழுது ஒளியூட்டி, கடவுள் மற்றும் அவரது வழிகள் பற்றிய அறிவை நமக்கு வழங்குகிறது. மறைநூல்களுக்குள் ஒரு புதிய அகத்தெளிவு, செபத்தில் ஆழம் அதிகரித்தல், மற்றும் அருளடையாளங்களின் புதுப்பித்தப் பாராட்டுதல் ஆகியவை இந்த கொடையின் அறிகுறிகள்.

*அறிவுரைத்திறன்* (சரியாக முடிவெடுத்தல்) – நல்ல அறிவுரை பெறுகிற மற்றும் கொடுக்கிற திறன். இது நடைமுறை வாழ்வு சூழல்களில் ஆவிக்குரிய முடிவுகளை எடுக்க ஆற்றல்படுத்தி, நமது கிறிஸ்தவ நடையில் நாம் முதிர்ச்சி அடைய அனுமதிக்கிறது. சில நேரங்களில் இது

ஒப்புரவு அருளடையாளத்தில் நடைபெறுகிறது. நன்மையில் இருந்து தீமையை, தவறானதில் இருந்து சரியானதைத் தெளிதேர்வு செய்ய தூய ஆவியார் உதவுகிறார். கடினமான சூழலை நாம் எதிர்கொள்கின்ற பொழுது மற்றவர்களிடம் உதவி பெற நம்மைத் தாழ்த்துவதால் இந்த கொடையில் நாம் வளர்கிறோம்.

*ஆற்றல்* (துணிவு/வலிமை) – கிறிஸ்தவ வாழ்வில் நாம் சந்திக்கும் சோதனைகள் மற்றும் ஆபத்துகளை வலிமையோடு எதிர்கொள்ள நமக்கு திறன் அளிக்கின்றது. ஏமாற்றங்கள் மற்றும் இடர்களிலும் வாழ்வதற்கு சரியான வழியைத் தொடர்ச்சியாகத் தேர்ந்தெடுக்க இது நம்மை ஆற்றல்படுத்துகிறது. உலகின் சோதனைகளைத் தடுப்பதால் நாம் துணிவில் வளர முடியும்: பணம், அதிகாரம், தன்மையப்பாடு, மற்றும் தன்நியாயப்பாடு. இது பெரும்பாலும் நற்செய்தி பரப்பல் அருள்கொடையின் வேராகப் பார்க்கப்படுகிறது.

*நுண்மதி* (அறிவு) – ஆண்டவர் பற்றி ஆழ்ந்த நம்பிக்கையும் உறுதிப்பாடும் கொண்டிருத்தல் மற்றும் கிறிஸ்தவ வெளிப்பாட்டின் உண்மைகளை அறிதல். தூய ஆவியாரின் இந்த கொடை ஆண்டவர் பற்றிய ஆழ்ந்த நம்பிக்கையும் உறுதிப்பாடையும் நம்மில் உருவாக்குகிறது. மறைநூல் மற்றும் திருச்சபையின் படிப்பினைகளை நாள்தோறும் படிக்கிறதன் வழியாக இந்த அறிவின் கொடையில் நாம் வளர்கிறோம்.

*இறைப்பற்று* (அன்பு) – ரோமையர் 8:15ல் "தத்து உணர்வு" என்று அழைக்கப்படுகிற இது நம்மில் அன்பு மற்றும் வழிபாட்டுடன் கடவுளை நமது தந்தையாக உணரச் செய்கிறது. இரக்கம் நிறைந்த, நம்பகமான, பேரன்பில் மிகுந்த, சினம் கொள்ளத் தாமதிக்கிற – ஆனால் உறுதியும் நீதியும் கொண்ட நமது தந்தையின் உண்மை உருவத்திற்கு இறைப்பற்று நம்மை இட்டுச் செல்கிறது. இது மற்ற மக்களில் பிரதிபலிக்கும் கடவுளின் தூயநிலையைக் காணவும் அவர்களை அன்பு செய்யவும் நமக்கு உதவுகிறது. நீதியைக் கடைபிடித்தல், அதிகாரம், உண்மைநிலை, நட்புநிலை, மற்றும் தாழ்ச்சியுடன் ஒத்துழைக்கும் மனப்பாங்குகள் வழியாக நாம் இறைப்பற்றில் வளர்கிறோம்.

*இறையச்சம்* – கடவுளின் நிகழ்மையில் மதிப்பளிக்கிற மற்றும் மலைக்கிற ஒரு மனப்பாங்கு. இதை அச்ச உணர்வோடு குழப்பிக்கொள்ளக் கூடாது. எனினும், கடவுள் யார் என்பதற்கு நாம் அளிக்க மதிப்புணர்வு மற்றும் மரியாதையின் ஒரு வெளிப்பாடகவே கடவுளை மீறுவதற்கான அச்சம் இருக்கிறது. இந்த கொடை எல்லா வாழ்வையும் கடவுளது வாழ்வின் பிரதிபலிப்பாக நாம் மதிக்கச் செய்கிறது. கடவுளிடம் அடிக்கடி செபித்தல், கடவுளின் கொடைகளுக்கு நன்றியுணர்வோடு இருத்தல், மற்றும் கடவுளின் பெயருக்கு மதித்தல் ஆகியவற்றால் நாம் மதிப்புணர்வில் வளர்கிறோம். ஆண்டவரிடமான அச்சம் முழு கிறிஸ்தவ வாழ்வுக்கு ஆன்மிகக் கதவாக, நமது வாழ்வில் பாவத்தை வெல்வதற்கு பேருதவியாக இருக்கிறது. (காண். திபா 11:10; நீமொ 9:10; திபா 34:12-15)

ஆ) **ஊக்கமூட்டும் கொடைகள்** (ரோமையர் 12:6-8): இந்த கொடைகள் கடவுள் உங்களைக் கருப்பையில் உருவாக்கிய பொழுதே வழங்கிய திறமைகள் ஆகும். இந்த திறமைகளும் கொடைகள் என்று அழைக்கப்பட காரணம் அவை கடவுளால் நமக்கு இலவசமாகத் தரப் பட்டுள்ளன, அதனால் நாம் அவற்றைக் கொண்டு நமது சமூகத்திற்குப் பங்களிக்கவும், மேலும் அவற்றைப் பயன்படுத்தி அவருக்கு நாம் மாட்சியைக் கொணரவும் முடியும். இந்த கொடைகள் நமது ஆளுமைத்திறன்கள், இயல்பு மற்றும் பெரும்பாலும் நமது அழைத்தல்களை உருவாக்க நமக்கு பயன்படுகின்றன. இந்த கொடைகள் ஒன்று மற்றதை விட மேலோங்கியதாக இருந்தாலும், இவை நம் ஒவ்வொருவரிலும் குறிப்பிட்ட அளவில் இருக்கின்றன. ‘‘கடவுளின் பலவித அருளின் நல்ல பெறுப்பாளர்களாக இருந்து ஒருவர் மற்றவருக்குப் பணியாற்ற இந்த கொடைகளைப் பயன்படுத்துங்கள்’’ (பேதுரு 4:8-11).

*இறைவாக்குரைத்தல்* (இறைவாக்கினர்) – கடவுளின் விருப்பத்தைத் தெளிவாக உய்த்தறியும் ஒருவர் – ஆண்டவரின் திருப்பொழிவு பெற்ற வகநிலையில் உள்ள ‘‘இறைவாக்கினர்’’ நிலை அல்லது செயல்பாட்டோடு குழப்பிக்கொள்ளக் கூடாது.

*தொண்டாற்றுதல்* (சேவையாளர்) – மற்றவர்களுக்கு பணியாற்ற விரும்புகிற மற்றும் விருந்தோம்பலை வெளிப்படுத்துகிற ஒருவர்.

*கற்பிக்கிறவர்* – உண்மையை ஆய்வுசெய்து பகிர விரும்புகிற ஒருவர் – உண்மையைப் பற்றிப் பிடித்து மற்றவர்களை நடத்திச் செல்கின்ற ஒரு விசுவாச மனிதர்.

*ஊக்கமூட்டுகிறவர்* – மற்றவர்கள் வெற்றிகரமான வாழ்வு வாழ ஊக்குவிக்கிற ஒருவர் – கடவுளின் அழைப்பிற்கு ஏற்றதை அடைய அல்லது நிறைவுசெய்ய அல்லது அதன்படி இருக்க மற்றவர்களை நகர்த்துகிற ஒருவர்.

*பங்களிக்கிறவர்* (கொடுக்கிறவர்) – மற்றவர்களுக்கு பயனளிக்க மற்றும் நற்செய்தியை முன்னகர்த்த தமது நேரம், திறமை, ஆற்றல் மற்றும் நிதியை/பொருளை வழங்க விரும்புகிற ஒருவர்; கடவுள் அனைத்து தேவைக்கும் வழங்குகின்றார் என்று அறிந்த, மற்றும் தம்மையும் தமது வளங்களையும் மற்றவர்களின் சேவைக்கு அளிக்கின்ற ஒரு விசுவாச மனிதர்.

*நிர்வாகி* (தலைமை தாங்குகிறவர்) – ஒருங்கிணைக்க, தலைமையேற்க அல்லது வழிநடத்த விரும்புகிற, சரியான மனிதர்களை ஒருசேரக் கொணர்ந்தால் எந்த செயல்திட்டத்தையும் நிறைவேற்றலாம் என்பதை விசுவாசத்தால் அறிந்த ஒருவர். பரந்த பார்வை கொண்ட ஒரு நபராக, இந்த நிர்வாகி இதில் அடங்கியுள்ள எல்லாவற்றையும் கண்டு பற்றிக் கொள்கிறார்.

*இரக்கம் காட்டுகிறவர்* (பரிவுள்ள நபர்) – தேவையில் உள்ளவர்களுக்கு பரிவு, அன்பு, மற்றும் அக்கறை காட்டுகின்ற ஒருவர்; மக்கள் அனுபவிக்கின்ற வலியை உடனே கண்டுணர்ந்து,

அன்பும் நலமும் கிடைக்கச் செயல்படுகிற ஒருவர்; ஒரு விசுவாச மனிதராக, அன்புடன் இணைந்து உழைக்க மற்றவர்களுக்கு உதவுகிறவர்.

இ) **வெளிப்பாட்டு/அருள்சார் கொடைகள்** (1 கொரிந்தியர் 12:7): இந்த கொடைகள் தூய ஆவியாரால் தனிநபர்களுக்கு வழங்கப்படும் இயல்புமீறிய திறன்களாக இருக்கின்றன. இவை இயல்பானத் திறன்கள் அல்ல. இந்த வெளிப்பாடுகள் திருச்சபையின் பொது நலனுக்காக இருக்கின்றன, மேலும் இவற்றை இந்த கொடையைத் தாங்குகிற நபரின் முக்கியத்துவத்தை முன்னெடுக்கப் பயன்படுத்தக் கூடாது. வெளிப்பாட்டு கொடைகளை நாம் கொண்டிருக்கிறது இல்லை. ஆண்டவர் தமது ஆசிகளை தம் மக்களுக்கு பொழிகின்ற வாகனங்களாக நம்மைப் பயன்படுத்துகிறார். நாம் 'கொடையைத் தாங்குகிறவர்களாக' இருக்கிறோம், மேலும் ''தாழ்ச்சி, ஆபத்தை எதிர்கொள்ளும் விருப்பம், கடவுளில் நம்பிக்கை, கிறிஸ்துவில் நமது சகோதர சகோதரிகளுக்கான அன்பு ஆகியவற்றோடு'' செயல்பட வேண்டும்.

I) அகத்தெளிவின்/வெளிப்பாட்டின் கொடைகள்

*அறிவு நிறைந்த சொல்வளம்* – இயல்பான மனதின் முயற்சிகள் வழியாக நாம் கற்காத, கடந்தகால, நிகழ்கால, அல்லது எதிர்கால உண்மைகளின் இயல்புமீறிய ஒரு வெளிப்பாடு – நமது சொந்த அனுபவங்களோடு, மறைநூல், கிறிஸ்தவ எழுத்தாக்கங்கள் அல்லது மற்ற தகவல் ஆதாரங்களைப் படிக்கிறதன் வழியாக பெற்றுள்ள அறிவோடு நாம் இதை குழப்பிக் கொள்ளக்கூடாது. இது இயல்புமீறி பெறப்பட்ட ஒரு வார்த்தை. நாம் படித்துள்ளவற்றில் இருந்து நலமடைதல் அல்லது மீட்பின் வாக்குறுதியை நாம் அறிவித்தால், விசுவாசத்தால் நிரம்பியவர்களாக அன்றி, மிதப்புணர்வு கொண்டவர்களாக நாம் இருக்கிறோம். உண்மையான இயல்புமீறிய அறிவானது இயேசு கிறிஸ்து வழியாக கடவுளைத் தனிப்பட்ட விதத்தில் அறிவதில் இருந்து தொடங்குகிறது. இயேசுவும் சீடர்களும் தூய ஆவியாரிடம் இருந்து 'அறிவு நிறைந்த சொல்வளத்தை'ப் பெற்றனர். இவற்றுக்கான சில எடுத்துக்காட்டுகள் யோவான் 4:17-27, மத்தேயு 17:27, மாற்கு 5:36-40, திருத்தூதர் பணிகள் 5:1-9, மற்றும் திருத்தூதர் பணிகள் 3:1-10 ஆகியவற்றில் காணப்படுகின்றன.

*ஞானம் நிறைந்த சொல்வளம்* – கிறிஸ்துவின் உடலின் உறுப்புகளுக்கு வழங்கப்படும் ஓர் இயல்புமீறிய அகத்தெளிவு, ஒரு குறிப்பிட்டச் சூழலில் கடவுளின் நேரம் மற்றும் திருப்பணி முறையை வெளிப்படுத்துகிறது. இது அறிவின் வார்த்தை, ஆவியைத் தெளிதேர்தல், அல்லது வெளிப்பட்ட இறைவாக்கின் தொடர்பு போன்ற தரப்பட்ட ஒரு வெளிப்பாட்டை விளக்குகிறது அல்லது ஒளியூட்டுகிறது. இது நமது வாழ்வின் அனுபவங்கள் அல்லது அறிவுசார் தொடரலில் நாம் பெறுகின்ற ஞானத்தைப் போன்றதன்று. இதை (திருமுழுக்கின் கொடையாகப் பெறும்) ஞானத்தோடு குழப்பிக்கொள்ளக் கூடாது. திருமுழுக்கில் வழங்கப்பட்டு, உறுதிபூசுதலில் உறுதி செய்யப்படும் பேறான ஞானமானது ஒரு வாழ்நாள் கொடையாகும், நமது ஆன்மிகப் பயணத்தில் நமக்கு அறிவுரை வழங்குவோருக்கு கீழ்ப்படிவதால் அது நம்மில் அதிகரிக்கிறது.

ஆனால் 'ஞானம் நிறைந்த சொல்வளம்' என்பது ஒரு குறிப்பிட்டச் சூழலில் கடவுளின் நேரம் மற்றும் திருப்பணி முறையின் இயல்புமீறிய ஒரு வெளிப்பாடாக இருக்கிறது.

*ஆவியைத் தெளிதேர்தல்* – ஒரு நபர் அல்லது சூழலானது ஊக்கம் பெறுவது தூய ஆவியாராலா, மனித ஆவியாலா, தீய ஆவியாலா அல்லது இந்த ஆவிகளின் சேர்க்கையாலா என்பதைக் கண்டுணரும் இயல்புமீறிய ஒரு திறன். ஆவிகளைத் தெளிதேர்தல் என்பது முடிவுகள் எடுப்பதற்குப் பயன்படும் அன்றாடத் தெளிதேர்வு அன்று, ஒருவர் இயல்பாகக் கொண்டிருக்கும் மனித இயல்புக்குள்ளே ஓர் அகத்தெளிவும் அன்று, மற்றவர்களின் நோக்கில் தவறானதை ஐயுறலில் தேர்ச்சியுற்றத் திறனும் அன்று. இது சூழல்களை மதிப்பீடு செய்யும் இயல்பானத் திறன் அன்று. ஆவிகளைத் தெளிதேர்தல் என்பது ஒரு குறிப்பிட்டச் சூழலுக்கு வழங்கப்படும் ஓர் இயல்புமீறிய வெளிப்பாட்டு கொடையாக இருக்கிறது. இந்த வெளிப்பாடு ஒரு காட்சி, ஓர் உணர்வு, அல்லது அறிவு நிறைந்த சொல்வளத்தைப் போன்ற ஒரு வார்த்தை வழியாக வரலாம். ஆவிகளைத் தெளிதேர்தலின் கொடையானது, போதைமருந்து, முன்மணப் பாலுறவு, பில்லிசூனியம், மற்றும் மற்ற சாவானப் பாவப் பழக்கங்கள் கொண்ட மக்களுக்கான திருப்பணியில், அவர்கள் தங்களது வாழ்வை மாற்ற நாடுகின்ற பொழுது அவசியமாகிறது. நாம் படிப்பினைகள் அல்லது இறைவாக்குகளுக்கு செவிமடுக்கின்ற, கிறிஸ்தவ அல்லது மதச்சார்பற்ற பதிப்புகளை வாசிக்கின்ற, மற்றும் கிறிஸ்தவ அல்லது மதச்சார்பற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், காண்மங்கள் அல்லது வலைதளங்களைப் பார்க்கின்ற பொழுது தெளிதேர்தலின் கொடைக்காக செபிக்கிறதும் முக்கியமானது. நலமடைதல் மற்றும் புதுமைகள், இறைவாக்கு மற்றும் அறிவு நிறைந்த சொல்வளம் ஆகியவற்றை மதிப்பீடு செய்து முடிவெடுக்க ஆவிகளைத் தெளிதேர்தலும், ஞானமும் உதவுகின்றன. வெளிப்படுத்தப்பட்டதை வெளிக்கொணரும் முன்பாக, மற்றக் கொடைகளோடு சேர்த்து, ஞானம் நிறைந்த சொல்வளமும் செபத்தின் வழியாக நாடப்பட வேண்டும். செபத் திருப்பணியாளர்கள் செபம் அல்லது நலமாக்கல் திருப்பணி வேளையில் இந்த ஆவியாரின் வெளிப்பாடு வருவதை எதிர்பார்க்க வேண்டும். திருப்பணி பெறுகின்ற நபரின் மாண்பைக் காக்க தேர்வுரிமையும் பரிவும் தேவைப்படுகின்றன. இந்த வெளிப்பாட்டு கொடைக்கு ஆழ்ந்த செப அர்ப்பணம் மற்றும் ஆவியாரில் முதிர்ச்சி ஆகியவை தேவைப்படுகின்றன.

## II) தொடர்புகொள்ளலின்/சொல்வன்மையின் கொடைகள்

*பரவசப்பேச்சு* – ஒரு தன்னியல்பாக, தூய ஆவியாரால் தூண்டப்பட்ட சொல்வன்மை, அதில் ஆவியாரின் தூண்டலுக்கு ஏற்றபடி நமது குரலை நாம் பயன்படுத்துகிறோம். நம்பிக்கையாளர் ஒருவர் தமது குரலொலியின் வார்த்தைகளை உருவாக்குவதில் வழிகாட்ட உள்ளுறையும் ஆவியாரை அனுமதிக்கும் பொழுது, பரவசத்தில் பேசுதல் அல்லது பாடுதல் அல்லது "ஆவியில் செபித்தல்" என்று அழைக்கப்படுவது நிகழ்கிறது. பரவசத்தில் பேச அல்லது பாட அல்லது செபிக்க நாம் செபிக்க வேண்டும், மற்றபடி நம்மால் அப்படி பேசவோ அல்லது அதைப் புரிந்துகொள்ளவோ இயலாது; மண்ணகத்தில் தற்போதுள்ள அல்லது இறந்து போன, அல்லது எண்ணற்ற வட்டார வழக்குகளில் ஒரு மொழியாக அது இருக்கலாம். பரவசத்தில்

செபித்தல் என்பது கட்டறுநிலை, அகத்தூண்டல், (உடலுக்கும் ஆவிக்கும்) புத்துணர்வு, புதுப்பித்தல், ஞானம், மற்றும் ஆன்மிகப் போராட்டத்தில் வெற்றியை வழங்குகிறது. பரவசப் பேச்சு கொடையானது பல குழுக்களால் அதிகம் வலியுறுத்தப்பட்டாலும், இது கொடைகளில் ‘‘தாழ்ந்ததாக’’ கருதப்படுகிறது.

*பரவசப்பேச்சை விளக்குதல்* – ‘பரவசப்பேச்சில்’ கடவுளின் சமிக்ஞைக்கு பதிலிறுப்பாக வழங்கப்படுகிற ஓர் இறைவாக்கு செய்தி. ஒருவர் பரவசப்பேச்சு பேசினால், அங்கு என்ன பேசப்பட்டது என்பது விளக்கப்பட வேண்டும். பரவசப்பேச்சு பேசிய நபரால் அல்லது குழுவில் உள்ள இன்னொருவரால் இந்த விளக்கம் வழங்கப்படலாம்.

*இறைவாக்குரைத்தல்* – ஒரு தனிநபர் அல்லது நம்பிக்கையாளர்களின் குழுவுக்கு கடவுளிடம் இருந்து வருகின்ற ஓர் இயல்புமீறிய தொடர்புகொள்ளல். இறைவாக்கினர் என்பவர் அடிக்கடி எதிர்காலத்தை முன்னறிவிக்கிறவராகத் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறார், வழக்கமாக அது கடவுளின் விருப்பத்தைப் பற்றிய அல்லது பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேலர் மனந்திருந்த இறைவாக்கினர்கள் கடவுளின் செய்தியைக் கொணரப் பயன்படுத்திய அதே விதத்தில் பாவம் அல்லது அநீதியைத் திருத்துவதற்கான அறிவிப்பாக இருக்கிறது. இந்த கொடையால் பலனளிக்கிற ஒரு நபர் கடவுள் பேசுவார் என்று எதிர்பார்த்து செவிமடுக்கவும், எப்பொழுதும் அதிகாரத்துக்கும் நிகழ்வின் ஒழுங்கிற்கும், மேலும் சபையின் தெளிதேர்வுக்குப் பலனளிக்க வேண்டும். பேசப்பட்ட செய்தியைத் தெளிதேர்வு செய்ய வேண்டும், கூறப்பட்ட அனைத்தையும் ‘நற்செய்தி உண்மையாக’ ஏற்க வேண்டிய அவசியமில்லை. இறைவாக்கு எப்பொழுதும் நம்பிக்கையாளர்களின் குழுமத்தால் தெளிதேர்வும் சோதனையும் செய்யப்பட வேண்டும், அது மேலும் சிறப்பாக, திருச்சபையின் இறுதி அதிகாரத்துக்கு உட்பட்டது. இறைவாக்குரைத்தல் என்பது விருப்பத்தினால் இறைவாக்குரைக்க ஒருவருக்கு வழங்கப்பட்டத் திறனன்று, மாறாக ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு தனித்துவமான நோக்கத்திற்காக ஆவியாரால் வழங்கப்படும் ஓர் உறுதியான செய்தியாக இருக்கிறது.

III) இயங்கலின்/ஆற்றலின் கொடைகள்

*விசுவாசம்* – இயேசுவின் பெயரால் சொல்கிறது அல்லது செய்கிறது நிறைவேறும் என்பதை எந்த ஐயமும் இன்றி உறுதியாக நம்புவதற்கு நமக்குத் திறன் அளிக்கின்ற தூய ஆவியாரின் ஓர் இயல்புமீறிய பொழிவு. விசுவாசம் என்பது ஒருவரை முழுவதும் கடவுளிடம் ஒப்படைத்தல் மற்றும் அவர் வெளிப்படுத்தியதை அறுதியாகவும் முழுமையாகவும் நம்புதலாக இருக்கிறது. இது தன்னியல்பாக வழங்கப்படுகிற மற்றும் கடவுளின் நோக்கம் நிறைவேறும் தருணம் வரை நிலைத்திருக்கிற கடவுளின் ஒரு கொடையாக இருக்கிறது.

*நலமாக்கும் கொடை* – கடவுளின் ஆற்றலின் இயல்புமீறிய பொழிவுகளின் விளைவாக, மருத்துவப் பயன்பாடு இல்லாமல் பிணியும் நோயும் நலமாதல். இது உடல், ஆன்மா மற்றும்/

அல்லது ஆவியின் “பிணியை” உள்ளடக்கி இருக்கலாம். கடவுள் நம்மை முழு மனிதராக நலமாக்க ஆர்வமாக இருக்கிறார். கிறிஸ்து நலமளிக்கிறவராக இருக்கிறார். மரியா மற்றும் புனிதர்களின் பரிந்துரை வழியாக நமக்கு நலம் கிட்டினாலும், நலமளிக்கிற கிறிஸ்துவிடம் அவர்கள் பரிந்துரைக்கிறதன் வழியாகவே அது நிகழ்கிறது. நலம் பெறுதலானது உடல், உள்ளம், உணர்வு, ஆன்மிகம், அல்லது உறவு சார்ந்ததாக இருக்கலாம்.

*புதுமை செய்யும் ஆற்றல்* – புதுமைகள் என்பவை நிகழ்வுகளுக்கு இடையே இயற்கையின் விதிகளுக்கு முரணாகத் தெரிகின்ற குறுக்கீடுகளாக இருக்கின்றன. ‘புதுமைகள் செய்தல்’ வழியாக தூய ஆவியார் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உருவாக்கி கடவுளின் வல்லமையை வெளிப்படுத்துகிறார்: தண்ணீர் திராட்சை ரசமாக மாறுதல், அப்பங்களும் மீன்களும் பலுகுதல் போன்ற இயற்கை விதிகளுக்கு மேற்பட்டவை; சூம்பியக் கையை நலமாக்கல் (லூக் 6:6-10), இல்லாத உறுப்பை மாற்றுதல், அறுவை சிகிச்சையின்றி கட்டி மறையச் செய்தல், அறுவை சிகிச்சையின்றி பார்வையற்றவருக்கு பார்வை அளித்தல் போன்ற வழக்கத்திற்கு மாறான நலமளித்தல்.

ஈ) **திருப்பணி கொடைகள்** (எபேசியர் 4:11-12): திருப்பணி கொடைகள் என்பவை செயல்பாடு/பதவியின், அல்லது விசுவாசக் குழுமத்திற்குள் குறிப்பிட்ட வகிநிலைகளில் அமர்த்தப்படுகிற மக்களின் கொடைகளாகும். “தூயவர்களுக்குத் திருப்பணி ஆற்றவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்பவும், அவர் சிலரைத் திருத்தூதர்களாக, மற்றவர்களை இறைவாக்கினர்களாக, மற்றவர்களை நற்செய்தியாளர்களாக, மற்றவர்களை மேய்ப்பர்கள் மற்றும் கற்பிக்கிறவர்களாக வழங்கினார்.” இந்த பத்தியைப் படிக்கிறதில், “மேய்ப்பர்கள் மற்றும் கற்பிக்கிறவர்கள்” என்பது ஒரே வகிநிலையாக உள்ளது, இது ஒரு நல்ல மேய்ப்பர் (குரு/ஆயர்) வார்த்தையின் ஒரு நல்ல ஆசிரியராகவும் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டுகிறது என்று சில மறைநூல் அறிஞர்கள் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

இந்த அருள்கொடைகளின் பட்டியல் நிறைவானது என்று புனித மறைநூல் அல்லது புனித மரபில் எங்கும் சுட்டப்படவில்லை.

(அருள்கொடைகள் குறித்த கருத்துகள் https://diolaf.org/gifts-and-charisms-ல் இருந்து எடுக்கப்பட்டுள்ளன)